# கருணை - KARUNAI
தமிழ் - ENGLISH

திருவள்ளுவர் ஆண்டு 2048
1st Oct. 2017
வருட சந்தா ரூ. 50 மட்டும்

கடவுள் நம்பிக்கை,
ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை இதழ்
*Volume : 8 Issue : 1*



**உரிமை மற்றும் பதிப்பாளர்:**
திருமதி. **இராமலெட்சுமி இளங்கோ** M.A.,
செல் : 8778874134

**ஆசிரியர்:**
திரு. **A.G.சந்திரமோகன்**
செல் : 9442038770

**உதவி குழு:-**
திரு. **G.சுப்பிரமணியன்**
செல் : 9842818242
திரு **H. தாயுமானசுவாமி** B.L.,
உயர்திரு. **M.கண்ணன்** B.L.,

உயர்திரு. **C.ஆறுமுகம்**

**கௌரவ ஆலோசகர்:**
தயவு.திரு. **P.சுப்பாராஜ்** M.A.B.L.
செல் : 9443794751

**Place of Publication**
Karunai Sabai Salai Buld,
Grace Hall
34, Poombukar Nagar,
North Extn. Uthangudi,
Madurai-625 107.


## தலையங்கம்

வள்ளலார் கண்ட “சமரச சுத்த சன்மார்க்கம்” என்ற பெயரில் சங்கம் சபை சாலைகளை இன்று பலர் ஆரம்பித்து வருகிறார்கள்.

ஆனால் வள்ளலார் வழி என்று சொல்லி சமய சடங்குகள் யோகம், தியானம், மூச்சுப்பயிற்சி என இவர்கள் செய்து வருகிறார்கள்.

இவர்களின் தவறான செயல்பாடுகள், சொற்பொழிவுகள் இவை அடிப்படையில் வள்ளலார் விமர்சிக்கப்படுவது வேதனைக்குரியதாக உள்ளது. இது அறியாமை மற்றும் அபக்குவச் செயல் ஆகும்.

வள்ளலாரின் உண்மைப் பொதுநெறி உள்ளது உள்ளபடி அறிய நேரிடையாக அவர்தம் ஆவணங்களை (12.04.1871க்குப் பின் உள்ளவை) வாசிக்க வேண்டும்.



# உலகில் ஒரு புதிய தனி மார்க்கம் 19ம் நூற்றாண்டில் தோன்றியதை உலகிற்கு இன்றே அறிவியுங்கள்

- ஏபிஜெ அருள்.

**மார்க்கத்தின் பெயர்:**

"சுத்த சன்மார்க்கம்"

**அந்த மார்க்கத்தை தோற்றுவித்தவர் :**

"திருவருட்பிரகாச வள்ளலார்."

**மார்க்கத்தின் கொடி :**

வெண்மை வர்ணம் மற்றும் மஞ்சள் வர்ணம்.

**மார்க்கத்தின் சங்கம்:**

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்.

**மார்க்கத்தின் சபை:**

சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானசபை.

**மார்க்கத்தின் சாலை:**

சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமசாலை.

**மார்க்கத்தின் மகாமந்திரம்:**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி.

**மார்க்கத்தின் மரபுகள்:**

நான்கு. அவையாவன :-

1. சாகாத கல்வியே கல்வி.
2. ஒன்றே சிவம் தான்
   என அறிந்த அறிவே தகும் அறிவு.
3. மலம் ஐந்தும் வென்ற வல்லபமே
   தனித்த பூரண வல்லபம்.
4. வேகாத காலாதி கண்டு எப்பொருளும் விளையவிளைவித்த தொழிலே மெய்த் தொழில் ஆகும்.

**மார்க்கத்தின் எக்காலத்தும் முக்கியத் தடைகள்:**

சாதி சமயம் மத மார்க்கங்கள்.

**மார்க்கத்தின் சாதனம்:**

கருணை ஒன்றே.

**மார்க்கத்தின் வழிபாடு:**

ஓர் உண்மை கடவுள் உண்டென்றும் உண்மை அன்பால் கருத்தில் கருதி வழிபாடு செய்தல்.

**மார்க்கத்திற்கு உரியவர்கள் :**

சமயம் மதம் முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றறக் கைவிட்டவர்களும், காமகுரோதம் முதலியவை நேரிட்ட காலத்தில் ஞான அறிவினால் தடுத்துக் கொள்பவரும், கொலை புலை தவிர்த்தவர்களும் ஆகிய இவர்கள் தான் இம்மார்க்கத்திற்கு உரியவர்கள்.

**சுத்த சன்மார்க்கத்தின் லட்சியம்:**

ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை.

**சுத்தசன்மார்க்கத்தார் கடமை:**

உண்மை கடவுளை தொழுவதே.

**சுத்த சன்மார்க்கத்தார்கள் ஒழித்துக் கொள்ள வேண்டியது:**

சாதி சமய கட்டுப்பாட்டு ஆசாரங்கள்.

**சுத்த சன்மார்க்கத்தார்கள் வருவித்துக்.......**

பொது நோக்கம்.

**சுத்த சன்மார்க்கத்தில் பயிற்சி:**

விசாரத்தில் இருப்பது.

உள்ளழுந்தி, சிந்தித்து, சிந்தித்தலை விசாரித்தல்.

நினைந்து உணர்ந்து நெகிழ்ந்து கண்ணீரால் உடல் நனைந்து இறைநிலையை உள்ளத்தில் காணுதல். அக அனுபவமே உண்மை.

**சுத்த சன்மார்க்கத்தின் முடிபு:** சாகாக்கல்வி

**சுத்த சன்மார்க்கத்தில் கடவுள் அருள்:**

மரணமில்லா பெருவாழ்வு.

**சுத்த சன்மார்க்க உண்மை கடவுளை உலகிற்கு வெளிப்படுத்திய நாள்:**

1871 சித்திரை 12-04-1871

**சுத்த சன்மார்க்கத்தால் வள்ளலார் பெற்ற தேகம் :**

தனி வடிவமாகிய ஒளி தேகம்.

(மேற்படி வாசகங்கள் அனைத்தும் வள்ளலாரின் சத்திய வாக்கியங்கள். உள்ளது உள்ளபடி)

சுத்த சன்மார்க்கம் நெறி எல்லா சமய மத மார்க்கங்களுக்கும் உண்மை பொது நெறியாக விளங்கும் என்கிறார் வள்ளலார்.

அன்பர்களே!

இந்த இனிய நாளில் நமக்கு தெரிய வந்த இந்த புதிய தனி பொது நெறியை நம் சுற்றத்தார்களுக்கு தெரிவிப்பதே நம் லட்சியம் ஆகும்.

அன்பர்களே! ஓர் வேண்டுகோள் :

நீங்கள் எந்த (சமய) பிரிவை சேர்ந்தவர் எனக்கேட்டால், "சுத்த சன்மார்க்கம்" எனச் சொல்லுங்கள். சட்ட ரீதியாக இதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நல்ல செய்தி வருவது சத்தியம். வள்ளலாரின் உண்மை பொது நெறியாம் சுத்த சன்மார்க்கம் வெளிப்படும் தருணம் இதுவே.

அன்புடன்: ஏபிஜெ அருள்.

## 15 அம்ச கோரிக்கைகளை வழியுறுத்தி ஒருநாள் தொடர் முழக்கம்

வடலூர் வள்ளலார் நிலையத்திற்கு சொந்தமான பரந்த இடம் சுத்தசன்மார்க்க நெறி மற்றும் கட்டளைப்படி மாற வேண்டும். இதற்கு அனைவரும் வற்புறுத்த வேண்டும். நிலையம் இங்ஙனமாக மாறுவதற்கு உதவி மற்றும் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். வசதி படைத்தவர்கள் இதற்கு முன் வர வேண்டும்.

வர வேண்டிய நிலையங்கள்.

வடலூரில் வர வேண்டி நிலையங்களுக்காக வற்புறுத்துங்கள் மற்றும் உதவியும் செய்யுங்கள்.

வள்ளலார் சத்திய ஞானசபையில் வள்ளலார் அமைத்த எட்டு வாசலையும் திறந்து ஜோதி தரிசிக்க ஏற்பாடு, பாடச்சாலை, வள்ளலார் கண்ட மூலிகைகள் ஆய்வு மற்றும் மருத்துவமனை மற்றும் அநாதை இல்லம் உட்பட 15 அம்ச கோரிக்கைகளை வழியுறுத்த வடலூர் நெய்வேலி சாலையில் நடைப்பெற்ற ஒருநாள் தொடர் முழக்கம் வெற்றிகரமாக நடைப்பெற்றது.



திரு **ஜி.சுப்பிரமணியம்** தலைமை தாங்கினார்.

திரு **சசாங்கன்,** திரு. **ஆதிநாராயணன்,**

திரு. **ராஜேந்திரன்,** திரு. **பார்த்திபன்**

திரு ஈரோடு **கதிர்வேல்,** திரு **சாதுசிவராமன்,**

திரு **சகாதேவராஜா,** திரு.**கணேசன்,**

திரு **அண்ணாமலை,** திரு **ஜோதிமைந்தன்,**

திரு **ஹரிதாஸ்,** திரு **ஜெயவேல்,** திரு **ரமேசுஷ்,**

திரு **சச்சிதானந்தம்,** திரு **முருகன்,** திரு **சீனிவாசன்**

திரு **செங்கான்** திரு **ரவிசந்திரன்** ஆகியோர்

கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்கள்.

**விழா ஏற்பாட்டாளர்** கருணை சபை சாலை நிறுவனர் திருமிகு **ஏபிஜெ அருள்,** வந்து சிறப்பித்த அனைவருக்கும் கருணை சபை சார்பாக நன்றிகள் தெரிவித்தார்.

வைக்கப்பட்ட கோரிக்கைகள் அனைத்தும் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது. இவைகள் அனைத்தும் செயல்படுத்தப் படவேண்டியவை எனப் பெரியோர்கள் ஊர்மக்கள் சொல்லி சென்றதை பார்க்க முடிந்தது. நிலைய நிர்வாகம் விரைந்து செயல்பட வேண்டும் என எல்லோரும் முறையிடுவோம்.

## 15 அம்ச கோரிக்கைகள். அவையாவன :

1. திருஅகவல் திரு விண்ணப்பங்கள் நான்கு 28 பாசுரப்பாடல்கள் சுத்த சன்மார்க்கத்தார்கள் வாசிக்க மெல்லென துதி செய்ய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இது சத்திய ஞான சபை முன்பு, முன் அனுமதி பெற்று நடைபெற அனுமதிக்க வேண்டும். மன்றங்கள், குழுக்களாகவும், தனியாகவும் அனுமதிக்கலாம் இதற்கென கட்டணமும் வசூலிக்கலாம்.

2. வள்ளலாரால் கண்டு வெளிப்படுத்தப்பட்ட மூலிகைகள் பற்றிய ஆய்வு மற்றும் மருத்துவமனை ஒன்று ஆரம்பிக்க வேண்டும்.

3. தருமசாலையில் நடைப்பெற்று வரும் அன்னதான சேவையை விரிவுபடுத்த வேண்டும்.

4. அநாதை, முதியோர் இல்லத்தை நல்ல முறையில் நடத்த கட்டிடம், மருத்துவ வசதி, ஏற்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். கைவிடப்பட்ட மற்ற உயிர்களை பாதுகாத்து பராமரிக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

5.வள்ளலாரின் தனி நெறிக்கு இருக்கும் நிலையம் இது ஒன்றே. இதன் வருவாயை இந்நெறிக்கே செலவழிக்க வேண்டும்.

6. வள்ளலாரின் கட்டளைபடி சுத்த சன்மார்க்கப் பாடச்சாலயை ஏற்படுத்துதல் வேண்டும். அங்கு தொடர்ந்து வாசிப்பு நடைப்பெறல் வேண்டும். கொலை புலை தவிர்த்தவர்களை நியமித்து வாசிப்புக்கு ஏற்பாடு உடன் செய்தல் வேண்டும்.

7. தைப்பூசத்திரு நாளில் மற்றும் மாசப்பூச நாளில் அருட் ஜோதி ஆண்டவரின் ஜோதி தரிசனத்தை அன்பர்கள் காண சத்திய

ஞானசபையில் வள்ளலார் அமைத்த எட்டு கதவுகளையும் திறந்து காட்ட வேண்டும். அதற்கான ஏற்பாடுகள் வசதிகள் செய்தல் வேண்டும்.

8. அனைத்து நாட்களிலும், உங்களால் பராமரிக்கப்படும் மற்ற நிலையங்கள் போல், எல்லா நாட்களிலும் அன்பர்கள் வந்து தரிசிக்க சத்திய ஞான சபையில் திரைகள் நீக்கி காட்டி ஜோதி வழிபாடு நடக்க வேண்டும். அனைத்து நிலையங்களிலும் தகுதி வாய்ந்த ஊழியர்களை நியமித்து வள்ளலாரின் வழிக்காட்டுதலின் படி மேற்படி வழிபாடுகளுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

9. விழாகாலங்களில் கூடும் லட்ச கணக்கான அன்பர்கள் மற்றும் மற்ற நாட்களில் வரும் அன்பர்கள் தங்குவதற்கு மற்ற கோயிலில் உங்களால் செய்யப்பட்டுள்ள தங்கும் விடுதிகளை ஏற்பாடு செய்தல் வேண்டும் .

10. போதியளவு கழிப்பறைகள், குளியலறைகள், உடமை பாதுகாப்பு வசதி மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் செய்தல் வேண்டும்.

11. மற்ற மாநிலத்தார்கள் வெளி நாட்டவர்கள் வள்ளலாரின் நெறி அறிய ஆசையுடன் வருகிறார்கள். அவர்கள் வள்ளலாரின் நிலையங்களை சுற்றி வருவதற்கும், எடுத்து உரைக்க கைடுகளையும், அவர்கள் தங்க வசதியையும், இதற்குரிய ஏற்பாடுகளுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

12. வள்ளலாரின் தனி நெறியை விரைந்து மக்கள் அறிந்திட ஒரு நூலகம் ஒன்று ஆரம்பிக்க வேண்டும்.

13. சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்திற்கென தனி கட்டிடம் கட்டுதல். மேற்படி சங்கத்தில் வள்ளலார் கட்டளைப்படி, அச்சங்கத்தில் சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்களை மட்டுமே சேர்த்தல் வேண்டும்.

கொலை புலை தவிர்த்தவர் என்றும் சாதி சமய மதங்களில் லட்சியம் வையாதவர்கள் எனவும் உறுதிமொழி படிவம் பெறுதல் வேண்டும். இதை சமரச சுத்தசன்மார்க்க சத்திய சங்க சந்தா ரசீது பின்புறம் அச்சிடப்படவேண்டும்.

(பொது நன்கொடை ரசீது பற்றி இங்கு குறிப்பிடவில்லை)

14. சாகாகல்வி குறித்த நல்ல விசாரணை ஆய்வு மையம் நிறுவுதல், மற்றும்,

15. நிலையத்திற்கு நியமிக்கப்படும் ஐந்து அறங்காவலர்கள் புலை

கொலை தவிர்த்தவர்களாக இருக்க வேண்டும். 5 அறங்காவலர்களில் 3 பேர் சுத்த சன்மார்க்க நெறி சார்ந்தவர்களாக இருக்க பரிசீலிக்க வேண்டும்.

அறையப்பா முரசு
முழங்கிய முழக்கம் சரியே என அறையப்பா முரசு.
ஊதூது சங்கே
உரியவர்களின் காதில் விழட்டும்
ஊதூது சங்கே!




# ஆண்டவரின் அருள் பெறுவது எப்படி? (வள்ளலார் வழியில்)

-- ஏபிஜெ அருள்.

அன்பர்களே!

காலம் போய்க் கொண்டிருக்கிறதே இன்னும் உண்மை அறிந்திட்டப் பாடில்லை. இன்று விசாரத்தில் அழுந்தி நான் செய்த முயற்சியை என் அறிவும் ஒழுக்கமும் ஒத்தவர்களுடன் சொல்லி நல்ல விசாரத்தை தொடர்கிறேன்.

உண்மை கடவுளாகிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருளை பெற என்ன செய்ய வேண்டும் என வள்ளலார் சொல்லியுள்ளார்கள் எனப் பார்க்கும் போது, மிக முக்கியமாக ஒன்றை குறிப்பிடுகிறார். அது "மரணமில்லா பெருவாழ்வு" ஆகும். இந்த வாழ்வை நல்கும் சாகாகல்வி ஆண்டவரின் அருளால் தான் நம் ஒவ்வொருவர்க்கும் உரைக்கப்படுகிறது.

ஆக, ஆண்டவர் அருளை நாம் பெறுவதற்கு காரணமே நித்திய வாழ்வுக்காக தான் என்பதை சத்தியமாக நாம் உணர வேண்டும். இந்த மரணமில்லா பெருவாழ்வை பெறுவதற்கு ஆண்டவரின் அருள் வேண்டும். அருளை பெற ஆண்டவரை காண வேண்டும். எங்கும் பரிபூரணமாக நிறைந்திருக்கும் இறைஒளியை நாம் ஒவ்வொருவரும் உள்ளத்தில் உணர்ந்து மெய்பொருளின் உண்மை சொரூபத்தை காணலாம். இதற்கான வழி என்ன என வள்ளலார் சொல்லியுள்ளார்கள்?. அது கீழே வரும் பாடலில் உள்ளது.

"“நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து
நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே

நிறைந்துநிறைந் தூற்றெழுங்கண்ணீரதனால் உடம்பு
நனைந்துநனைந் தருளமுதே
நன்னிதியே ஞான நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்துவனைந் தேத்துதும்நாம் வம்மின் உல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே."

இப்பாடலினின் படி நாம் செய்யவேண்டியது::

1) நினைந்துநினைந்து
2) உணர்ந்துணர்ந்து
3) நெகிழ்ந்துநெகிழ்ந்து
4) அன்பே நிறைந்துநிறைந்து
5) ஊற்றெழுங்கண்ணீரதனால் உடம்பு நனைந்துநனைந்து
6) அருளமுதே நன்னிதியே ஞான நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று வனைந்துவனைந் தேத்துதும் நாம்..

ஆக, மேற்படி 6 யையும், நன்முயற்சி பயிற்சியில் நாம் செய்தே ஆக வேண்டும்.

வரிசையாக காண்போம்.

### 1) நினைந்துநினைந்து...

இங்கு நாம் எவையை நினைந்து நினைந்து பார்க்க வேண்டும்?

நாம் பெருவாழ்வில் பெருங்களிப்புறவே சித்தி எலாம் வல்ல சிவசித்தன் உளம் கலக்கப் போவது சத்தியமே என நாம் நினைந்து,(உறுதியாக கருத்தில் கொள்ள வேண்டும்)

அடுத்து, நாம் வேறு கடவுள் வேறு என்று பிரித்து பார்க்காமல், அந்த உத்தம சற்குருவை ஓர் உறவே என நினைந்து கொண்டிருக்க வேண்டும் என்கிறார் வள்ளலார்.

அடுத்து, வள்ளலார் கட்டளைப்படி

நாம் உலக பழக்க வழக்கங்களைத் தவிர்த்துக் கொண்டுள்ள நமது உள்ளகத்தே கடவுள் அமர்ந்து அருள் பாலிப்பது உண்மை என நினைந்திருக்க வேண்டும். (பாடல் ஆதாரம் : சார் உலக...),

மேலும் மற்றொரு பாடலில்

"பணிந்துபணிந் தணிந்தணிந்து பாடுமினோஉலகீர்
பரம்பரமே சிதம்பரமே பராபரமே வரமே

துணிந்துவந்த வேதாந்த சுத்தஅனு பவமே
துரியமுடி அனுபவமே சுத்தசித்தாந் தமதாய்த்
தணிந்தநிலைப் பெருஞ்சுகமே சமரசசன் மார்க்க
சத்தியமே இயற்கையுண்மைத் தனிப்பதியே என்று
கணிந்துளத்தே கனிந்துநினைந் துரைத்திடில் அப் பொழுதே
காணாத காட்சிஎலாம் கண்டுகொள லாமே."

**மேற்படி பாடல் மூலம் நாம் நினைந்து உரைக்க வேண்டியவை:**

பரம்பரமே
சிதம்பரமே
பராபரமே
வரமே
துணிந்துவந்த வேதாந்த சுத்தஅனு பவமே
துரியமுடி அனுபவமே
சுத்தசித்தாந்தமதாய்த்
தணிந்தநிலைப் பெருஞ்சுகமே
சமரசசன் மார்க்க சத்தியமே
இயற்கையுண்மைத் தனிப்பதியே - என்பவைகளே.

அன்பர்களே!

**மேற்படியானவை முறையே பார்க்கும் போது :**

மேலானவரே!
அறிவுவழியானவரே!
முடிவாகிய உயர்வானவரே!
வலமாகிய இறவாவாழ்வை அருளுபவரே!
இதுவரை (வேதத்தில்) வெளிப்பட்ட அனுபவமில்லாத தனி அனுபவத்தை தந்தவரே!
இதுவரை எவரும் பெற்றிடா உயர்நிலை தருபவரே!
இதுவரை முடிந்தமுடிவை கடந்து பேரின்ப சித்தி பெருவாழ்வை அருளுபவரே!
சாதாரணநிலையில் பெரும்சுகத்தை பெறவைப்பவரே!
உண்மை பொது வழியில் கண்டுகொள்ளக்கூடிய மெய்பொருளே!
நீயே ஒன்றெனும் ஒன்றாகிய இயற்கை உண்மை கடவுள்!

என நாம் கருத்தில் முதலில் ஏற்றி, பின்பு உண்மை அன்பால் நினைந்து நினைந்து நன்முயற்சியில் இருக்க வேண்டும்.

ஆக, மொத்தத்தில் நாம் நினைந்து பார்க்க வேண்டியது: (இங்கு

நாம் என்பது உலக பழக்கவழக்கங்களை தவிர்த்தவர்கள் ஆவர்).

ஓர் உண்மை கடவுளே! என நினைந்து,

அக்கடவுளால் தோற்றுவிக்கப்பட்ட

நாம் வேறு கடவுள் வேறு என்று பிரித்து பார்க்காமலும்

அக்கடவுளின் நிலை உள்ளத்தில் உரைவதாக

உள்ள அந்த உண்மையை நினைந்து

ஆண்டவரின் அருளால் தெரியவரும் சாகாகல்வியின் பயனாகிய மரணமில்லா பெருவாழ்வில் வாழ்தலை நினைந்து, நினைந்து முயற்சித்தல் வேண்டும்.

இங்ஙனமாக கடவுளை உள்ளபடி நினைந்து, உள்ளமெல்லாம் கனிந்துருகி நினைந்து இருத்தல் வேண்டும்.

அடுத்து,

## 2) "**உணர்ந்து உணர்ந்து**" .. (PART II)

இங்கு எதை உணர வேண்டும் என்பதற்கு

"உணர்ந்து உணர்ந்து .." என்ற இப்பாடல் உதவுகிறது.

**இங்கு எதை உணர வேண்டும் என வள்ளலார் சொல்கிறார்கள்?**

அதற்குமுன்,

நம் வள்ளலார் பல பாடல்களில் வெளிப்படுத்தியது

"உணர்ந்துணர்ந்து உணரினும் உணராப் பெருநிலை..." என்றும் "உணர்ந்தார்க்கும் உணர்ந்து கொள்ள எட்டானை.. "என்றும், மேலும், "எந்த வகையிலும் உணர்ந்து கொளற்கரியதாய்.."

மற்றொரு பாடலில்

"உணர்ந்துணர்ந்துணரா ஒரு தனிப் பெரும்பதி.." என்றும்,

"ஓதி உணர்ந்தவர் எல்லாம் எனைக்கேட்க எனைத்தான் ஓதாமல் உணர்ந்துணர்வாம்

உருவுறச் செய் உறவே" என்கிறார்.

ஆக, புறத்தில், படிப்பால், ஓதுவதால் கடவுளை உணர முடியாது என வள்ளலார் சொல்கிறார்கள்.

பின்பு,

இங்கு எதை "உணர்ந்து உணர்ந்து" என்கிறார் வள்ளலார் ?

இதற்கு அருட்பெருஞ்ஜோதி அட்டகம் 8 பாடல்களில் 3 முதல் 7 வரை பாடல்களை ஊன்றி வாசித்தல் வேண்டும்.

அப்பாடல்கள் :

கண்முதல் பொறியால் மனமுதல் கரணக்

கருவினால் பகுதியின் கருவால்
எண்முதல் புருட தரத்தினால் பரத்தால்
இசைக்கும்ஓர் பரம்பர உணர்வால்
விண்முதல் பரையால் பராபர அறிவால்
விளங்குவ தரிதென உணர்ந்தோர்
அண்முதல் தடித்துப் படித்திட ஓங்கும்
அருட்பெருஞ் சோதிஎன் அரசே.

நசைத்தமேல் நிலைஈ தெனஉணர்ந் தாங்கே
நண்ணியும் கண்ணுறா தந்தோ
திசைத்தமா மறைகள் உயங்கின மயங்கித்
திரும்பின எனில்அதன் இயலை
இசைத்தல்எங் ஙனமோ ஐயகோ சிறிதும்
இசைத்திடு வேம்என நாவை
அசைத்திடற் கரிதென் றுணர்ந்துளோர் வழுத்தும்
அருட்பெருஞ் சோதிஎன் அரசே.

சுத்தவே தாந்த மவுனமோ அலது
சுத்தசித் தாந்தரா சியமோ
நித்தநா தாந்த நிலைஅனு பவமோ
நிகழ்பிற முடிபின்மேல் முடிபோ
புத்தமு தனைய சமரசத் ததுவோ
பொருள்இயல் அறிந்திலம் எனவே
அத்தகை உணர்ந்தோர் உரைத்துரைத் தேத்தும்
அருட்பெருஞ் சோதிஎன் அரசே.

ஏகமோ அன்றி அனேகமோ என்றும்
இயற்கையோ செயற்கையோ சித்தோ
தேகமோ பொதுவோ சிறப்பதோ பெண்ணோ
திகழ்ந்திடும் ஆணதோ அதுவோ
யோகமோ பிரிவோ ஒளியதோ வெளியோ
உரைப்பதெற் றோஎன உணர்ந்தோர்
ஆகமோ டுரைத்து வழுத்தநின் றோங்கும்
அருட்பெருஞ் சோதிஎன் அரசே.
தத்துவம் அனைத்தும் தனித்தனி கடந்தேம்
தத்துவா தீதமேல் நிலையில்

சித்தியல் முழுதும் தெரிந்தனம் அவைமேல்
சிவநிலை தெரிந்திடச் சென்றேம்
ஒத்தஅந் நிலைக்கண் யாமும்எம் உணர்வும்
ஒருங்குறக் கரைந்துபோ யினம்என்
றத்தகை உணர்ந்தோர் வழுத்தநின் றோங்கும்
அருட்பெருஞ் சோதிஎன் அரசே."

அன்பர்களே!

ஆக, மேற்படி பாடல்களில் மூலம் நாம் உணரவேண்டியது யாதெனில், நாம் இது நாள் வரை,
இந்திரிய கருவிகள் கண்டதையோ,
கரண கருவிகள் கண்டதையோ,
உணர்வால் அறிவால் விளங்கியதோ,
மாமறைகள் உரைத்ததோ,
வேதாந்தம் சித்தாந்தம் அனுபவமோ,
உரைத்த எதுவுமோ,
தத்துவங்களோ,
அதையும் கடந்த தத்துவாதீதமோ, சித்தியலோ
**இவை எதுவும் இல்லை.** அப்படியெனில்,
--- இவை முறையே :
விளங்க அரிதாகிய
இசைத்திட முடியாத
முடிந்த நிலை மேலாகிய
உரைத்திடாத எல்லாம்,
எல்லோருக்கும் மேலாகிய
- புதிய வடிவில்,
- தனி அனுபவமாகிய,
- இயற்கை உண்மையாகிய,
- அருட்பெருஞ்ஜோதியே

என நாம் உணர்ந்து உணர்ந்து வேண்டுதல் வேண்டும் எனத் தெரிந்துக்கொண்டோம் இன்று.

இதை மேலும் உறுதிப் படுத்துகிறது கீழ் வரும் பாடல்:
"கண்டதெலாம் அநித்தியமே கேட்டதெலாம் பழுதே
கற்றதெலாம் பொய்யேநீர் களித்ததெலாம் வீணே

உண்டதெலாம் மலமேஉட் கொண்டதெலாம் குறையே
உலகியலீர் இதுவரையும் உண்மையறிந் திலிரே
விண்டதனால் என்இனிநீர் சமரசசன் மார்க்க
மெய்ந்நெறியைக் கடைப்பிடித்து மெய்ப்பொருள்நன் குணர்ந்தே
எண்டகுசிற் றம்பலத்தே எந்தைஅருள் அடைமின்
இறவாத வரம்பெறலாம் இன்பமுற லாமே. "

**மற்றொரு பாடலில்,**

"அடைந்திடுமின் உலகீர்இங் கிது தருணம் கண்டீர்
அருட்சோதிப் பெரும்பதிஎன் அப்பன்வரு தருணம்
கடைந்ததனித் திருவமுதம் களித்தருத்தி எனக்கே
காணாத காட்சிஎலாம் காட்டுகின்ற தருணம்
இடைந்தொருசார் அலையாதீர் சுகம்எனைப்போல் பெறுவீர்
யான்வேறு நீர்வேறென் றெண்ணுகிலேன் உரைத்தேன்
உடைந்தசம யக்குழிநின் றெழுந்துணர்மின் அழியா
ஒருநெறியாம் சன்மார்க்கத் திருநெறிபெற் றுவந்தே."

ஆக, வள்ளலார் வழியாகிய சுத்தசன்மார்க்கத்தை மட்டுமே சார்ந்து, மார்க்க மரபுகள் நான்கு தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை உணர்ந்துணர வேண்டும்.

அன்பர்களே!

**இன்னொரு முக்கிய பாடல் அது :**

வேகாதகால்உணர்ந்து சின்னம் பிடி
வேகாத நடுத்தெரிந்து சின்னம் பிடி
சாகாததலைஅறிந்து சின்னம் பிடி
சாகாத கல்விகற்றுச் சின்னம் பிடி.

சாகாத கல்வித் தரம்அறிதல் வேண்டுமென்றும்
வேகாத கால்உணர்தல் வேண்டுமுடன் - சாகாத்
தலைஅறிதல் வேண்டும் தனிஅருளால் உண்மை
நிலைஅடைதல் வேண்டும் நிலத்து."

அன்பர்களே!

உணர்ந்து கொள்ள வேண்டியதாக நாம் உறுதி எடுத்துக்கொண்டது :

இங்கிருக்கின்ற ஒன்றையும் பொருளாகக் கொள்ளாமல், சாதி சமய மதங்கள், புராணங்கள் இதிகாச கலைகள் எதிலும் லட்சியம் வையாது, எல்லாப் பற்றுகளும்

காரணமான ஆசார வகைகளை விட்டு
உண்மை கடவுளை தொழுவதை மட்டுமே
என உணர்ந்தேன்.

ஆனால்,

இப்போது "வேகாத கால்" என்பதையும் உணர்த்துதல் வேண்டும் என்றால் இந்த வேகாத கால் என்றால் என்ன?

நிற்க!

நம் அறிவில் இந்த வேகாத கால் என்ன என்று உணர வைக்கும் தயவு கடவுள் தயவு ஆகும்.

இதோ அதன் பாடல்

சாகாத தலைஇது வேகாத காலாம்
தரம்இது காண்எனத் தயவுசெய் துரைத்தே
போகாத புனலையும் தெரிவித்தென் உளத்தே
பொற்புற அமர்ந்ததோர் அற்புதச் சுடரே
ஆகாத பேர்களுக் காகாத நினைவே
ஆகிய எனக்கென்றும் ஆகிய சுகமே
தாகாதல் எனத்தரும் தருமசத் திரமே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே.
ஏகாத கல்விதான் சாகாத கல்வியென்
றேகாத லாற்சொன்னீர் வாரீர்
வேகாத காலினீர் வாரீர். வாரீர்

ஆக,

சாகா கல்வியை கற்க வேண்டும் என்றும், அக்கல்வி கடவுளின் நிலை நாம் காணும் போது, கடவுள் அருளால் நமக்கு உரைக்கப்படும் என்பதை தெரிந்து, சாகா கல்வி உண்மை தெரிவிப்பதில் ஒன்றாகிய வேகாத கால் உணர்ந்துணர்வோம்.

அன்பர்களே!

ஒருவாறு நம் நன்முயற்சியால்
நினைந்துநினைந்து - எது என்பதையும்
உணர்ந்துணர்ந்து - எது என்பதையும்
தெரிந்துக்கொண்டோம்.

அடுத்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து எது என அடுத்த நல்ல விசாரத்தில் காண்போம்.

அன்புடன் : ஏபிஜெ அருள்

# சிறுமி உணர்த்திய உண்மை

-- ஏபிஜெ அருள்.

சில ஆண்டுகளுக்கு முன்பு எனது குடும்பம் கணவர் மகள்களுடன் ஒரு நாள் மாலைப் பொழுது சைவ உணவுகத்திற்கு சென்றிருந்தேன். உணவுக்கு ஆர்டர் பண்ணிவிட்டு உட்கார்ந்திருந்தோம்.ஹோட்டல் சுவர்களில் மகான் ஒருவரின் பெரிய சைஸ் படங்கள் பல மாட்டப்பட்டிருந்தது. அன்பு பார்வை,எளிய தோற்றம், பசு மாட்டை இரக்கத்தோடு தடவி கொடுக்கும் படம் என பலபடங்கள். இதை கண்ட எனது இளைய மகள் (3வது வகுப்பு சிறுமி), சுவரில் மாட்டிய படத்தை காண்பித்து, டாடி இந்த படங்களில் இருப்பது யாரு?எனக் கேட்டாள்.

இவர் பெரிய மகான் என்றேன்.

மகான்னா? என்றாள்.

அவளுக்கு புரிவதற்காக,

இரக்கமுள்ள பாசமுள்ள சாமி தாத்தா, என்றேன். படத்த பாரு, அந்த மகான் தாத்தாவிடம் மாடு எவ்வளவு அன்பா நிக்குது என்றேன்.

கொஞ்ச நேரம் எல்லா போட்டோவையும் பார்த்தாள். ஒரு போட்டோவை மட்டும் ரொம்ப நேரமாக உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆர்டர் பண்ணின டிபன் வகைகள் வரத் தொடங்கின.

எப்பொழுதும் முதலில் ஆவலுடன் சாப்பிட ஆரம்பிப்பவள் அன்று அவள் முன்பு அவளுக்கு பிடித்த நெய் ரோஸ்ட் வைத்தப் பிறகும், அந்த படத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளை பார்த்து நான் 'சாப்பிடு', என்றுச் சொல்லி விட்டு, நாங்கள் சாப்பிட ஆரம்பித்தோம். சத்தமாக "டாடி", என்றழைத்து, "இது நல்ல தாத்தா இல்லை, ஆய் தாத்தா என்றாள்."

உடனே நான் அப்படி சொல்லக்கூடாது.

சாப்பிடு என்று அதட்டினேன்.

உடனே அவள் அப்பாவை நோக்கி,

"டாடி, இது நல்ல தாத்தா இல்லை" என்று மீண்டும் சத்தமாகச் சொன்னாள்.

சுற்றியிருந்தவர்கள் நிமிர்ந்து பார்த்ததை கண்ட என் கணவர், சுதாரித்து, அவள் அருகில் அமர்ந்து,

'சரி சாப்பிடு', என்று தோசையை பிட்டு வாயில் கொடுத்தார்.

எதுக்கு அப்படி சொன்ன? அப்பாவுக்கு புரியலை. இப்ப மெதுவா சொல்லு அப்பா கேட்கிறேன் என்றார்.

அவள் சொன்ன பதிலால் நாங்கள் அதிர்ந்தோம். நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்த விளக்கம் எனக்கு கிடைத்தது போலிருந்தது.

அவள் சொன்னது :

டாடி..டாடி ..அந்த தாத்தா புலி தோல் மீது உட்கார்ந்திருக்காங்க. இந்த புலித்தோல் எப்படி இந்த தாத்தாவுக்கு கிடைச்சுது? புலியை கொல்லக்கூடாதுல டாடி. அது பாவமில்ல? தோல் உரிக்கும் போது புலி அழுதிருக்குமில்ல? .....என அவள் சொல்லும் போது அவள் கண்கள் கலங்கியதை நாங்கள் கண்டோம்.

உடனே நான் :

சரி..சரி அப்படியெல்லாம் இல்லை. செத்த புலியிடமிருந்து தான் எடுப்பாங்க பேசாம சாப்பிடு என்றேன்.

அதற்கு அவள் :

அப்படியா டாடி...! அம்மா சொல்றபடி இருந்தாலும், எனக்கு இந்த தாத்தாவை பிடிக்கல... புலி கண்ணைப் பாருங்க டாடி, அது இன்னும் சாகல..... என்றாள்.

உடனே எனது பெரிய பெண் குறிக்கிட்டு, 'நீ சொல்றது தான் கரக்ட் பாப்பா. புலியிடமிருந்து தோலை உரிக்கறது பாவம். இந்த தாத்தா தோல் மேல் உட்காரக் கூடாது. நீ சாப்பிடு', என்றவுடன் சமாதானம் ஆனாள்.

அன்பர்களே!

கடவுளின் அருளைப் பெற்றுத் தரும் கருணை நம்மிடம் விருத்தியாகாமல் தடை செய்வது சாதி சமய ஆசாரங்களே என்கிறார் வள்ளலார். நிற்க!



## சாதி சமய கட்டுப்பாட்டு ஆசாரங்கள் எவை?

மேலே சிறுமி சுட்டிக் காட்டிய புலித்தோல் மீது அமரச்சொல்லும் கட்டுப்பாடே அந்த சமயத்தின் கட்டுப்பாடு ஆகும். ஆம், அந்த உணவகத்தில் இருந்த அந்த மகான் உண்மையில் உயிர்களிடத்தில் அன்பு இரக்கம் கொண்டவரே. ஆனால், இறைவனை நோக்கி தவம் செய்ய அவர்

நம்பிக்கை கொண்டிருந்த சமயத்தின் வழக்கம் கட்டுப்பாட்டால் தோலின் மீது அமர்ந்து, தவத்தால் உடலை சூடேற்றி, உள்ளத்தில் ஒளி காண்பதே பயிற்சியாகக் கொண்டிருந்தார்.

நிற்க! மற்ற உயிர்களின் தோலை உபயோகப்படுத்துவது எங்ஙனம் உண்மை இரக்கம் ஆகும்? தோலுக்காக உயிர்கள் வேட்டையாடி கொல்லப்படுகிறது. அப்படியே அவை இறந்த பிறகே தோல் எடுப்பதாக வைத்துக் கொண்டாலும், இறந்த அந்த விலங்கின் தோல் உரிப்பது, அதன் பல்லை எடுப்பது, எங்ஙனம் அவைகளை "தம் உயிர் போல் பாவித்தல் வேண்டும்" என்ற சைவநெறிக்கு ஏற்புடையது ஆகும்?

இதை போல் பல சடங்குகள் எல்லா சாதி சமயங்களிலும் உள்ளது.

★ மற்ற உயிர்களை தான் வணங்கும் தெய்வங்களுக்கு பலி கொடுத்தல்.

★ கடினமாக நம்மை வருத்திக் கொண்டு விரதம், கடின தவம், மூச்சு பயிற்சியில் இருத்தல்.

★ வேண்டுதல் பெயரில் நம் உடம்பில் ஆயுதங்களால் புண்ணாக்கி கொள்ளுதல்.

★ தவத்திற்கும் யாகத்திற்கும் மற்ற உயிர்களை கொன்று அதன் இரத்தம், தோல், மாமிசம் எடுத்தல்.

★ கல்லால், சவுக்கால் அடித்தல, அடித்துக் கொள்ளுதல்.

★ உடன்கட்டை, தாசியாக்குதல், தீண்டாமை, தீட்டு ஆதல், மற்றவர்களை விரோதியாக்குதல், போர், தண்டனை, அடிமையாக்குதல்.

இவை நம் சாதி சமயத்தில் செய்ய வைக்கும் சடங்குகள். இவைக்கு கட்டுப்பட்டே ஆக வேண்டும். அந்தந்த சாதி சமய தலைவர்கள் அனுமதிக்கும் மற்றும் அவைகளின் புனித நூல்களில் உள்ளது.

யாரும் இக்கட்டுப்பாடுகளை மறுக்க முடியாது. மீற முடியாது.

நிற்க! இந்த பழக்க வழக்கம் நம்மிடம் இயற்கையாக இருக்கும் கருணையை விருத்தியாக்குமா? சொல்லுங்கள்.

இரக்கம் நாம் பெற்றிருந்தாலும் நம் சாதி பொதுநோக்கத்தை தருமா?

நம் சமய சடங்குகள் மற்ற உயிர்களுக்கு துன்பம் தராமல் இருக்கிறதா?

நல்ல விசாரணையில் வெளிப்படும் ஒரு புதிய தனி உண்மைகளுக்கு நாம் சார்ந்துள்ள சமயமதம் இடம் தருமா?

சிந்திப்போம். புதிய தனி பொது உண்மை வழி காண்போம்.

நம் கருணையை விருத்தியாகாமல் செய்யும் இந்த சாதி சமயத்தை கைவிடுவோம்.

உண்மை கடவுளை உண்மை அன்பால் கண்டு அருள் பெற வைக்கும் சுத்த சன்மார்க்கத்தை சாருவோம்.

----அன்புடன் ஏபிஜெ அருள்.

# நம்மவர்களே

-- ஏபிஜெ அருள்.

ஐப்பசி 7 நன்னாள். கொடி நாள். இந்நாளில் ஓர் உண்மையறிவோம்.

திருஅகவல், திருவருட்பா, உபதேச குறிப்புகள் உட்பட அனைத்திலும் உள்ள உண்மை ஆண்டவரின் நிலை, சொரூபத்தை,அக்கடவுளின் தயவை தனது தூய உள்ளத்தால் உள்ளே அகத்தில் அறிந்து அனுபவிக்கிறார் வள்ளலார். அங்ஙனம் கண்ட இயற்கை உண்மை இயற்கை விளக்கத்தை எழுத்தால், பாடலால் பதிவு செய்து உள்ளார் வள்ளலார். வள்ளலார் பெற்ற இந்த அனுபவ உண்மையை அவர்தம் நூல்களை படிப்பதினால் நாம் தெரிந்துக் கொள்ளலாமே அன்றி அறியவோ அனுபவிக்கவோ முடியாது.

இராமலிங்க அடிகளார் மேற்படி உண்மை கடவுளின் நிலை காண தன்னை எப்படி உரியவர் ஆக்கி கொண்டாரோ, அதே போல் எவர் ஒருவர் தன்னை உரியவராக்கி கொள்கிறார்களோ அவர்கள் மட்டுமே அக அனுபவம் பெற முடியும். அப்படி எனில் வள்ளலார் தான் கண்ட அக அனுபவத்தை நூல்களில் பதிவாக்கி உள்ளார்? ஏன்?.

அவைக்கு ஒருவாறு காரணம் இரண்டு..

1) நம்மவர்கள் உண்மை அன்பால் விசாரம் செய்யும் போது, நாம் செய்யும் விசாரத்தை விரைவாக எடுத்து செல்வதற்கும்,செல்லும் பாதையை உறுதி படுத்திக்கொள்ளும் விதமாக நமக்கு கிடைத்த ஓர் துணையே என்றும்,

2) புறத்தில் மற்ற மார்க்க நெறிகளுக்கு ஈடாக, பதில் கொடுக்கும் விதமாக பதியப்பட்ட சாட்சியாகிய ஓர் புற ஆவணமே அவை.மற்றபடி, இம்மார்க்கத்தில் அக அனுபவமே என்கிறார் வள்ளலார்.

நம் நிலை என்ன? நம்மை அனுஷ்டிக்கும் தெய்வத்தின் நிலை என்ன? என்ற விசாரத்தை நாம் ஒவ்வொருமே செய்தே ஆக வேண்டும்.இடைவிடாது இரக்கம் கண்ணீர் விட்டு நன்முயற்சியில்

உள்ளழுந்தி சிந்தித்து சிந்தித்தலை விசாரித்தல் வேண்டும் என்கிறார். நம்

அக அனுபவத்திலே தான் வள்ளலார் கண்ட உண்மைகளான கொடி, ஆன்மா,இறை சொரூபம், சாகா கல்வி, மரணமில்லா பெருவாழ்வு இவை அனைத்தும் இறை தயவாலே அறியவைக்கப்பட்டு அனுபவமாகுகிறது. தான் பெற்ற அனுபவத்தை நீங்கள் அனைவரும் பெறுவதற்கு யாதொரு தடையுமில்லை இது சத்தியம் என்கிறார். உண்மை அன்பால், உண்மை அறிவால், சுத்த சன்மார்க்கத்தை மட்டுமே சார்ந்து வருபவர்களுக்கு இறை உண்மை அவர்களின் நல்ல அனுபவம் அறிவின் கண் தோன்றும் என்ற உண்மையை தான் வள்ளலார் சொல்கிறார்கள்.

இந்த உண்மை கடவுள் தயவால், நமக்கு சாகா கல்வி உரைக்கப்படுகிறது. சாகாகல்வி கற்று நம் தேகத்திற்கு ஏற்படுகின்ற மரணத்தை தவிர்த்து இத்தேகத்தை அழியா தேகமான ஒளி தேகமாக்கி கொள்ளலாம் என்கிறார் வள்ளலார். ஆக, நாபி முதல் புருவமத்தியின் உட்புறத்தில் தொங்கும் ஓர் சவ்வை வள்ளலார் போல் நாம் காண அக அனுபவம் பெற வேண்டும்.

நாமாகிய சிற்றணுவின் உண்மை அறிய சுத்த சன்மார்க்கம் மட்டுமே சார்ந்து ஒழுக்கம் நிரப்பி கொள்ள வேண்டும்.

ஆன்மாவை,இறை ஒளியை அறிந்து அனுபவித்தவர்கள் என்றால் ஒளிதேகம் பெற்றவர்கள் என்று பொருள்.

மற்றவர்கள் அனைவருமே துன்பம்,பயம்,மூப்பு,பிணி முதலிய அவத்தைகளை பெற்றவர்கள், பெற்றுக்கொண்டிருப்பவர்கள், பெறப்போகிறவர்களே.

இவர்கள் மரணம் அடைவார்கள்.

எனவே தான் வள்ளலார் சொன்ன அனுபவ உண்மைகளை அங்ஙனமே நம்மை வாசிக்கும்படி கட்டளையிட்டார் வள்ளலார். எனவே, வள்ளலார் சொன்ன உண்மையை (உரைநடை,பாடல்,அகவல், விண்ணப்பம் முதலியவை) நாம் வாசிக்க அல்லது மற்றவர்கள் வாசிக்க சொல்லி கேட்க கூடுமே அன்றி வள்ளலார் வெளிப்படுத்திய எவைக்கும் விளக்கத்தை நாம் கொடுக்கவே முடியாது. அல்லது விளக்கி மற்றவர்கள் சொல்வதை கேட்பதில் அல்லது எழுதியதை நாம் படிப்பதில் (வியர்த்தம் ) பலனின்மை என்கிறார் வள்ளலார்.

அன்பர்களே! இது தானே சரி.

இதுவே சத்தியம். இதுவே நான் கண்ட வழி என்கிறார் வள்ளலார். இதை அறியாமையிலும் வல்லபதன்மையிலும் மாற்றவோ திரித்து கூறவோ எவருக்கும் உரிமை இல்லை.

அன்பர்களே! இது தானே சரி!

வள்ளலார் பெயரில் அவர்தம் மார்க்கத்தை சார்ந்தவர் என்ற வகையில் இத்தகைய செயலில் ஈடுபடுவது மிக பெரிய பாவச்செயலே மேலும் இத்தகையவர்கள் வந்ததை வாங்கி கட்டிக் கொள்ள வேண்டும் என்கிறார் வள்ளலார்.

அன்பர்களே! இது தானே சரி!?

அக அனுபவம் பெறாதவர்கள் (அவத்தைகளை தவிர்த்துக் கொள்ளாதவர்கள்) வள்ளலாரின் ஆவணங்களில் உள்ளவற்றை அப்படியே வாசிக்க வேண்டுமே அன்றி, விளக்கம் கொடுக்க முடியாது. விளக்கி சொற்பொழிவு செய்பவர்களால் மேல் விளைவை உண்டு பண்ணும். அவர்களும் வந்ததை வாங்கி கட்டி கொள்வார்கள்.

அன்பர்களே! இது தானே சரி.

இதுவே சத்தியமாகும். அன்புடன் : ஏபிஜெ அருள்
நன்றி.வணக்கம்.



## "அரசியலமைப்புச் சட்டமும் மதசார்பின்மையும்" புத்தகத்தில்- நீதிபதி திரு அரிபரந்தாமன்

"... மதசார்பின்மை என்பது மதத்திற்கு எதிரானதோ அல்லது கடவுள் மறுப்பு வாதமோ அல்ல என்பதை முதலில் நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

மதசார்பின்மைக்கான முதல் குரல் கடவுள் நம்பிக்கை கொண்ட வள்ளலாரிடமிருந்தே வந்தது:

தமிழ்நாட்டிலிருந்து எழுந்த மதச்சார்பின்மைக்கான குரல் கடவுள் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்த ஒருவரிடமிருந்தே வந்தது.

"பெரியாரின்" கடவுள் பற்றிய கருத்துக்கள் உங்கள் அனைவருக்குமே நன்றாகத் தெரிந்து தான் இருக்கும். அத்தகைய ஒருவர் தான் மதசார்பின்மை நெறியாளர் என்று அவரைப் போற்றியதோடு, அவர் எழுதிய புரட்சிகரமான பாடல்களை எல்லாம், தான் நடத்தி வந்த குடியரசு நாளிதழில் பலமுறை வெளியிட்டு வந்ததோடு ,அந்த பாடல்களை இலவசமாக மக்களிடையே விநியோகித்தும் வந்தார்.அவர்தான் "வள்ளலார்" என்று பரவலாக அறியப்பட்ட ராமலிங்க அடிகளார் ஆவார்.

"மகாகவி பாரதியார்"

கூட அவரை "மகத்தான சமூக சீர்த்திருத்தவாதி" என்று போற்றிப் புகழ்ந்துரைத்தார்.

ஆழ்ந்த கடவுள் நம்பிக்கை கொண்டியிருந்த வள்ளலார் அனைத்து மதங்களையும், சாதிகளையும், நால் வருணத்தையும், சடங்குகளையும், வேதங்களையும், புராணங்களையும் குப்பைகள் என்று வர்ணித்ததோடு அவற்றை நிலத்தில் ஆழப்புதைத்து உரமாகப் பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார்.

”இருட் சாதித் தத்துவ சாத்திரக் குப்பை

இருவாய் புன்செயில் எருவாக்கிப் போட்டு...”

அந்த நேரத்தில் தமிழகம் முழுவதும் இயங்கி கொண்டிருந்த மடங்கள், கோயில்கள், ஆகியவற்றிற்கு நேர் விரோதமாக ” சமரச சுத்த சன்மார்க்க சங்கம் என்ற அமைப்பை அவர் உருவாக்கியதோடு, துறவிகளின் காவி உடைக்கு பதிலாக வெள்ளை உடையை அணிந்து தன் உடலை மறைத்துக் கொண்டார் வள்ளலார். - நீதிபதி அரிபரந்தாமன்.

## "சமரசம்"

முதலில் "சமரச வேத சன்மார்க்க சங்கம்"என்பதற்குப் பொருள்:

எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகிய அறிவுநூல் முடிபான நான்காவது மார்க்கத்தை அனு‘டிக்கின்ற கூட்டமென்று கொள்க. மேற்படி மார்க்கம் நான்காவன:

தாச மார்க்கம்,

சற்புத்திர மார்க்கம்,

சக மார்க்கம், சன்மார்க்கம் என நான்கு.

‘ஷடாந்த சமரச சுத்த சிவ சன்மார்க்கம் என்பதில் ஷடாந்தம் என்பது யாது?

வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம் ஆக ஆறு. மேற்படி அந்தங்களின் அனுபவம் காலம் இடம் முதலிய வேறுபாடுகளால் ஏறிக் குறையும். ஆதலால், ஷடாந்தமும் வியாபகமில்லாமல் வேதாந்த சித்தாந்தத்தில் நான்கந்தமும் வியாப்பியமா யிருக்கின்றன. மேற்படி அந்தம் நான்கின் ஐக்கிய விவரம்: வேதாந்தத்தில் போதாந்த யோகாந்தமும், சித்தாந்தத்தில் நாதாந்த கலாந்தமும் அடங்கியிருக்கின்றன. இந்த ஐக்கியம் பற்றி வேதாந்த சித்தாந்தமே இப்போது அனுபவத்தில் சுத்த வேதாந்த சுத்த சித்தாந்தமாய் வழங்குகின்றன.

இவற்றிற்கு அதீதம் ஆகிய சுத்த வேதாந்த சித்தாந்த அந்தாந்தமாகிய சமரசசுத்த சன்மார்க்கமே நித்திய மார்க்கம். மேற்குறித்த மார்க்கத்திற்குச் சமய மதங்களாகிய சன்மார்க்கங்கள் அநந்நியமாய் விளங்கும் அந்நியமல்ல. மேற்படி சமயமத மார்க்கங்கள் எவை எனில், சமய சன்மார்க்கம்

மதசன்மார்க்கம் என இரண்டு. இவற்றுள் அடங்கிய சன்மார்க்கம் அனந்தம். அதில் சமய சன்மார்க்கத்தின் வகை ஆறு, தொகை முப்பத்தாறு, விரிவு அறுகோடி. இதுபோல் மதத்திலும் வகை தொகை விரிவு உள்ளன. மேற்குறித்த சமய மத சன்மார்க்கங்களில் வகரவித்தை தகரவித்தையுள. அவை அவ்வச் சமயமத சன்மார்க்கங்களின் தலைமையாகிய கர்த்தா மூர்த்தி ஈசுரன் பிரமம் சிவம் முதலிய தத்துவங்களில் காலப் பிரமான பரியந்த மிருக்கும்ளூ அதற்குமேலிரா.

மேற்படி சமயமத சன்மார்க்கங்களில் ஷடாந்த சமரச முளதோவெனில்: உளது. யாதெனில்: வேதாந்த சித்தாந்த சமரசம், யோகாந்த கலாந்த சமரசம், போதாந்த நாதாந்த சமரசம். இதற்கு அதீதம் 'டாந்த சமரசம். இதற்கு அதீதம் சன்மார்க்க சமரசம். இதற்கு அதீதம் சுத்த சமரசம். ஆதலால், சுத்த சமரசத்தில் சன்மார்க்கத்தைச் சேர்க்க சுத்த சமரச சன்மார்க்கமாம். இது பூர்வோத்தர நியாயப்படி, கடைதலைப்பூட்டாகச் சமரச சுத்த சன்மார்க்கமென மருவியது.

இதன் தாத்பரியம் யாதெனில்:

சமரசம் என்பதற்குப் பொருள் -

எல்லா அந்தங்களினது அந்தமும் தனக்குப் பூர்வமாக்கித் தான் உத்தரத்தி னின்று மருவியது சமரசம். இதற்கு அனுபவம் குருதுரிய ஸ்தானம். சுத்த சமரச மென்பதற்கு நியாயம்: விந்து பரவிந்து இரண்டையும் மறுக்கச் சுத்தவிந்து வந்தது போலும், சிவம் பரசிவம் இரண்டையும் மறுத்தது சுத்தசிவம் போலும். சன்மார்க்கம் சிவசன்மார்க்கம் இரண்டையும் மறுத்தது சுத்த சன்மார்க்கம். பூர்வத்தில் நின்ற சமயமத சன்மார்க்கங்களை மறுப்பது சுத்த சன்மார்க்கம். இதன் பொருட்டு ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க மென்றே மருவியது. ஒருவாறு, ஷடாந்தங்களின் பொதுவாகிய ஷடாந்த சன்மார்க்கம் ஒன்று. இதன் பூர்வத்தில் சமரச சன்மார்க்கம் ஒன்று, இதன் உத்தரத்தில் சுத்த சன்மார்க்கம் ஒன்றுளூ ஆதலால் ஷடாந்த சமரசம். ஆன்மாவுக்கு அருள் எப்படி அநந்நியமோ, அதுபோல் சுத்த சன்மார்க்கத்திற்குப் பூர்வத்தில் சொன்னசன்மார்க்கங்கள் யாவும் அநந்நியம். நன்றி:ஏபிஜெ அருள்

**வள்ளலாரின் அசல் கையெழுத்துப்பிரதி**
**சென்னையில் உள்ள தனியார் கல்வி நிறுவன**
**ஆவணக் காப்பகத்தில் இருந்து எடுக்கப்பட்ட ஸ்கேன் காப்பி**
**நன்றி : திரு. ரவிச்சந்திரன்**
**வள்ளுவர்-வள்ளலார் மன்றம், சென்னை**

# வள்ளலார் கைப்பட எழுதிய சத்திய சிறுவிண்ணப்பம் - பக்கம்-1

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்சோதி ஆண்டவர்க்கு [illegible] சத்திய சிறுவிண்ணப்பம்.

[illegible]


## வள்ளலார் கைப்பட எழுதிய சத்திய சிறுவிண்ணப்பம் - பக்கம்-2

[illegible]

# வள்ளலார் கைப்பட எழுதிய சத்திய சிறுவிண்ணப்பம் - பக்கம்-3

[illegible]


# வள்ளலார் கைப்பட எழுதிய சத்திய சிறுவிண்ணப்பம் - பக்கம்-4




# வள்ளலார் கைப்பட எழுதிய சத்திய சிறுவிண்ணப்பம் - பக்கம்-5

[illegible]


## வள்ளலார் கைப்பட எழுதிய சத்திய சிறுவிண்ணப்பம் - பக்கம்-6



## வள்ளலார் கைப்பட எழுதிய சத்திய சிறுவிண்ணப்பம் - பக்கம்-7



**மேற்கண்ட வள்ளலாரின்
அசல் கையெழுத்துப்பிரதியை
ஸ்கேன் காப்பி எடுப்பதற்கு அனுமதித்த
கல்வி நிறுவன தாளாளர் அவர்களுக்கு நன்றி.**




இறவாத வாழ்வு பெற்ற
திருவருட்பிரகாச வள்ளலார்
பிறந்த நாள்
முப்பெரும்விழா.
வழிபாடு ஆனந்தம்
நல்லவிசாரணை

திருச்சி மாநகரில்
05-10-2017


இடம்:31,அருட்பெருஞ்ஜோதிஇல்லம் ,
காந்தி ரோடு, sriரங்கம்,திருச்சி

முப்பெரும் விழாவிற்கு
வந்து சிறப்பித்து தருபவர்கள்::
★ திரு சந்திரசேகரன் ★திரு பரமசிவம்
★திரு கங்காதரன்
★திருமிகு ஏபிஜெ அருள்
★திருமதி & திரு நாகராஜன்-அஜந்தா
★திரு கணேசன் ★திரு அருள்வாசகம்
★திரு ரமேஷ் ★திரு ஞானவேல்
★திரு ஹரிதாஸ் ★திரு மலைப்பட்டி சந்திரசேகர்
★திரு சுப்பிரமணியம் ★ திரு சசாங்கன்
★ திரு சகாதேவராஜா ★திரு செங்கான்
★திரு ரவிசந்திரன் ★தண்டபாணி

வருக! :விழா அமைப்பு:: வருக!
வள்ளல் பெருமான்
ஒளிநெறி அருட்பணி மன்றம்,
sri ரங்கம்,திருச்சி.9443422906

அன்புடன்அழைக்கிறேன்:
வள்ளல் தொண்டன்D.சண்முகம்.

# சுத்த சன்மார்க்க நெறியும், இந்திய அரசமைப்புச் சட்ட சரத்தும்




**SSS**

**Samarasa Suddha Sanmarga**


**சமரச சுத்த சன்மார்க்கம்**

**உண்மை பொது நெறி**

**SSS**

**Secularisation**
**Sovereign**
**Sociable**

**மதசார்பின்மை**
**இறையாண்மை**
**பொது நோக்கம்**




***apjarul***